# சட்டமன்றத்தில் விஜய்யின் ஆணவப் பேச்சைக் கண்டித்து கழக முன்னணியினர் ஆர்ப்பாட்டம்!



சட்டமன்றத்தில் முதல்வர் விஜய் ஆணவப் பேச்சைக் கண்டித்து திண்டுக்கல் கிழக்கு, மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திண்டுக்கல்லில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் துணை பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் இ. பெரியசாமி, முன்னாள் அமைச்சர் மேற்கு மாவட்ட செயலாளர் அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்ட செயலாளர் இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் கண்டன உரையாற்றினர். வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் வீரா.சாமிநாதன் உள்பட நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



சட்டப்பேரவையில் மைனாரிட்டி ஆட்சியின் முதலமைச்சர் விஜயின் ஆணவப் பேச்சையும் அருவருக்கத்தக்க உடல் மொழியையும் வரலாற்று சம்பவங்களை தவறாக திரித்து பதிவு செய்வதையும் கண்டித்து விழுப்புரம் மத்தியம், தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் விழுப்புரம், நகராட்சி திடலில், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா. இலட்சுமணன் தலைமையில் நடைபெற்றது. மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ் வரவேற்புரையாற்றினார். வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான், தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழக துணை பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி கண்டன உரையாற்றினார். இதில் ஒன்றிய முன்னாள் அமைச்சர் செஞ்சி என்.இராமச்சந்திரன் உள்ளிட்ட கழக செயல்வீரர்கள், வெல்லும் தமிழ் பெண்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.




சேலம் ஒருங்கிணைந்த மாவட்டம் சேலம் மத்திய, கிழக்கு, மேற்கு மாவட்டத்தின் சார்பில் சேலம் கோட்டை மைதானத்தில் சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜய்யின் ஆணவப்பேச்சைக் கண்டித்து கழக துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா எம்.பி. தலைமையில் மாவட்ட செயலாளர்கள் இரா.இராஜேந்திரன், எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., டி.எம்.செல்வகணபதி எம்.பி. ஆகியோர் முன்னிலையில் கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது. ஆர்பாட்டத்தில் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள்.



சட்டமன்றத்தில் முதல்வர் விஜய்யின் ஆணவப் பேச்சைக் கண்டித்து சைதை கலைஞர் பொன்விழா வளைவு அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்டச் செயலாளர்கள் மா.சுப்பிரமணியன், நே.சிற்றரசு, மயிலை த.வேலு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. கண்டன உரையாற்றினார். இதில் மு.க.தமிழரசு, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., முன்னாள் அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், சட்டமன்றத்தில் முதல்வர் விஜயின் ஆணவப் பேச்சைக் கண்டித்து, 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக சட்டமன்றக் கொறடா எ.வ.வேலு அவர்கள் உரையாற்றியபோது... உடன் சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.எஸ். தரணிவேந்தன்.எம்.பி., கழக மருத்துவர் அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை, கோ.கண்ணன், ஆர்.ராஜசேகர், எஸ்.அம்பேத்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், இரா.ஸ்ரீதரன், ஆர்.சிவானந்தம், வ.அன்பழகன், ந.பாண்டுரங்கன், கே.வி.சேகரன், எதிரொலிமணியன், நிர்மலாவேல்மாறன், எஸ்.பன்னீர்செல்வம், கே.வி.ராஜ்குமார். க.சௌந்தரராசன், பிரியா விஜயரங்கன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



முதல்வர் விஜய் சட்டமன்றத்தில் மிசா சட்டம் குறித்து தவறாக பேசியதைக் கண்டித்து சிவகங்கை மாவட்ட கழகத்தின் சார்பில் சிவகங்கை நகர் அரண்மனை வாசலில் முன்னாள் அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர்கள் மு.தென்னவன், திருமதி தமிழரசி சரவிக்குமார், மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ. வல்லபாய், மாவட்ட செய்தி தொடர்பாளர் அ.அயுப்கான், சிவகங்கை நகர் கழக செயலாளர் சி.எம்.துரை.ஆனந்த் உட்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.